1995 ஏப்ரல் 5]

இருக்கிற இடத்திலே இருக்க இடம் இல்லாமல் குடியிருந்துக்கொண்டிருக்கிற மக்களுக்கு இருக்க இடத்தை கட்டித் தருவதற்காக கிட்டத்தட்ட உலக வங்கியின் மூலம் 100 கோடி ரூபாயும் கேட்டு கிழியாத ஆடை, ஒழுகாத வீடு, ஆறாத சோரை இந்த அவனியே கவனிக்க பவனி வந்து அத்தனை பேருக்கும் வாரி வழங்கிக் கொண்டிருக்கின்ற நடமாடும் பேசும் தெய்வத்தினுடைய ஆட்சியிலே வளர்ந்து வரும் நகரமாக விரைவிலே தாலுக்காவினுடைய மையமாக விளங்கக் கூடிய கொடுமுடியிலே வருகின்ற சிறப்புத் திட்டத்தின் கீழ் வருகின்ற நிதியாண்டிலேயாவது உலக வங்கியிலேயிருந்து பெறக்கூடிய 100 கோடி ரூபாயிலே இந்த கருணை தெய்வத்தின் ஆட்சியிலே ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி 350 குடியிருப்பு அடுக்ககங்களையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டித்தர ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு நிலை பேரூராட்சிகளை பொருத்தவரை குடிசை மாற்று வாரியத்தினுடைய பணிகள் விரிவுபடுத்தப்பட்டு இருக்கின்றன. குடிசைமாற்று வாரியத்தினுடைய நிதிநிலையை கருத்திலே கொண்டு அங்கு பணிகள் தொடர்ந்து தொடங்கப்படும். அதேபோல அங்கு அடுக்கு மாடி வீடுகள் போன்றவை எல்லாம் குடிசை மாற்று வாரியத்தினுடைய நிதிநிலையைக் கருத்திலே கொண்டு அமைத்துத் தரப்படும். நகப்பாளையம் கிராமத்தை பொருத்தவரைக்கும் அப்படி எந்தவிதமான பரிசீலனையும் அரசில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 228, டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

228—

பெண்ணாகரம் தொகுதியில் நீர்ப்பாசனத் திட்டங்கள்

33026*—டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக பெண்ணாகரம் தொகுதியில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றும் பணி மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் LEGISLATIVE ASSEMBLY

[1995 ஏப்ரல் 5

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மேற்காணும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் மிகவும் வறட்சியான மாவட்டம். அதிலும் என்னுடைய தொகுதி மிகவும் வறட்சியான தொகுதி. மலைப்பிரதேசங்களைக் கொண்ட தொகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக எந்தவிதமான சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் நிறைவேற்றப்பட முடியாத சூழ்நிலை உள்ளது என்பதை அறிவித்தார்கள். இந்த வேளாண்மை பொறியியல் துறை மூலமாக கசிவு நீர்க் குட்டை கட்டுதல் மண்வளப் பாதுகாப்பு திட்டங்கள் மூலமாக பணிகள் மேற்கொள்ளுதல், மினி வாட்டர் ஷெட் மற்றும் தடுப்பு அணைகள் கட்டுவது இதன் நோக்கம் என்னவென்றால் நிலத்தடி நீர் பாதுகாக்கப்படவும் இதனால் விவசாய கிணறுகள் வறண்டு விடாமல் ஆண்டு முழுவதும் விவசாயம் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் பாதிக்காமல் விவசாயம் ஏற்படுத்தவும் இப்படிப்பட்ட திட்டங்கள் தேவைப்படுகின்றன. ஏனென்றால் என்னுடைய தொகுதி 80% மானாவாரி நிலங்களைக் கொண்ட பகுதி. நூற்றுக்கணக்கான சிற்றாறுகள் ஓடிக் கொண்டிருக்கின்ற பகுதி. ஆகவே அந்த சிற்றாறுகளுடைய நீர் வீணாக காவேரியில் கலக்காமல் இருக்க இப்படிப்பட்ட சிறு அணைகளைக் கட்டினால் அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தொகுதியினுடைய மொத்த பரப்பளவே 75,806.72 ஹெக்டேர். இதிலே பயிரிடக்கூடிய பரப்பளவு 63,483 ஹெக்டேர். பெண்ணாகரம் தொகுதியிலே மொத்தம் உள்ள கிராமங்கள் 53. இவற்றில் ஏற்கனவே பாசன ஏரிகள் 109 இருக்கின்றன. வேளாண்மை பொறியியல் துறையின் மூலமாக கசிவு நீர்க் குட்டைகள் 188 கட்டப்பட்டிருக்கினறன. எனவே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று இந்தத் துறை அந்தப் பகுதியிலே ஆய்வை

1995 ஏப்ரல் 5]

மேற்கொள்ளும். நீர் வரத்தும் நீரை சேமிக்கக்கூடிய நில வளமும் இருக்கும் என்று சொன்னால் அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் *10.30*

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை பொறியியல் துறை மூலமாக இப்படி பல தொகுதிகளுக்கு நிறைவேற்றப்பட முடியாமல் இருக்கின்ற தொகுதிகளில் இப்படி நீர்ப் பாசன திட்டங்களுக்கு பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படி பணத்தை ஒதுக்கியும் அந்தப் பகுதியில் இப்படிப்பட்ட நீர்ப் பாசன திட்டங்கள் கொண்டு வர முடியாத சூழ்நிலை இருக்கும்போது அப்படிப்பட்ட அந்த நிதியை இப்படிப்பட்ட நீர்ப்பாசன திட்டங்கள் செய்யக்கூடிய மிகவும் பின் தங்கிய என்னுடைய தொகுதிக்கு மாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை நீர் வீணாகி கடலில் கலக்காமல் அந்த மழை நீரைத் தேக்கி அதன் மூலமாக கிணற்று நீர் ஊற்றைப் பெருக்கக்கூடிய திட்டங்களைத்தான் இன்றைக்கு வேளாண்மைப் பொறியியல் துறை நடத்திக் கொண்டிருக்கிறது. எனவே, இந்தத் துறைக்கு இதனுடைய பணியைக் கருதி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தக்க அறிவுரைகளையும், அதிக நிதியையும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தத் துறை தன்னுடைய பணியை சிறப்பாக நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *229*, திரு. எச். எம். ராஜு, இருக்கையில் இல்லை, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்.

229—

உதகை வட்டத்தில் பெண்கள் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் அமைத்தல்.

37399*—திரு. எச்.எம். ராஜு:**

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—